1979 பிப்ரவரி 22]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இதற்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். தனியார் நிறுவனம் என்பதாலே நாம் ஆணையிட முடியாது, ஆலோசனை வேண்டுமானால் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10-10.]

2. அறிவிப்புகள்.

(அ) பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையால் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு திரு. ந. குப்புசாமி அவர்களின் பெயர் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளது. முறைப்படி நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையும் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடத்தின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால் திரு. ந. குப்புசாமி பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என நான் அறிவிக்கிறேன்.

(ஆ) வேளாண்மைப் பல்கலைக்கழக நிர்வாக வாரியத்திற்கு நியமனம்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கான தேர்தலுக்கு திரு. அ. மா. பரமசிவன் அவர்களின் பெயர் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளது. முறைப்படி நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளரின் எண்ணிக்கையும், நிரப்பப்பட வேண்டிய வெற்றிடத்தின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால், திரு. அ. மா. பரமசிவன் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என நான் அறிவிக்கிறேன்.